| | | |
|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 24/04/2024 | முதல் | 28/04/2024 |
| அறிக்கை எண் : | 033/ 2024 | வெளியீட்டு நாள் : | 23/04/2024 | | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (18.04.2024 முதல் 22.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –28-04-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/04 | 19/04 | 20/04 | 21/04 | 22/04 | தேதி | நாள்-1 24/04 | நாள்-2 25/04 | நாள்-3 26/04 | நாள்-4 27/04 | நாள்-5 28/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.2 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 41 | 41 | 41 | 41 | 41 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 40 | 40 | 41 | 40 | 41 |
| 27 | 28 | 28 | 28 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 27 | 27 | 26 | 27 |
| 4 | 5 | 5 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 3 | 2 | 2 | 4 |
| 71 | 59 | 74 | 66 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 80 | 80 | 80 |
| 38 | 45 | 38 | 33 | 25 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 12 | 15 | 15 | 12 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 12 | 14 | 14 | 14 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | **தென்** கிழக்கு | **தென்** கிழக்கு | **தென்** கிழக்கு | **தென்** கிழக்கு | **தென்** கிழக்கு |

## **குறுஞ்செய்தி** :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 40°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 14 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (24.04.2024 முதல் 28.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 14 கி·மீ· வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும்· கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும்· போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கரும்பு, வாழை,** கால்நடை.

**கரும்பு:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் கரும்பு சாகுபடியில் மேலுரமிடுதல் நல்ல பயனளிக்கும்.

கிணற்றுப் பாசனமுடைய பகுதிகளில் ஒரு எக்டேருக்கு 225 கிலோ தழைச்சத்து மற்றும் 112 ½ கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் மூன்று சம பாகங்களாகப் பிரித்து கரும்பு நடவு செய்த 30, 60 மற்றும் 90ம் நாட்களில் இடுதல் வேண்டும்.

**வாழை:**

புன்செய் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள வாழை மரங்களுக்கு நுண்ணூட்டச் சத்து அளிப்பது மிகவும் அவசியமாகும். தற்போது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி என்ற அளவில் பிளான்டோசைம் கலந்து தெளிக்கலாம்.

பிறகு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் ஆசிட்லைம் (அமிலச் சுண்ணாம்பு) மற்றும் துத்தநாக சல்பேட் இவற்றை கலந்து தெளிக்கலாம் என அறிவுறுத்தப்படுகிறது.

## கால்நடை:

வெயில் காலங்களில், வறண்ட குளம் மற்றும் குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான தண்ணீரில் உள்ள நத்தைகள், கிருமிகள் மற்றும் புழுக்கள் மூலம் கால்நடைகளை நோய் தாக்கக் கூடும். எனவே விவசாயிகள் தங்கள் கால்நடைகள் தண்ணீர் வற்றியுள்ள குளம் குட்டைளில் தண்ணீர் குடிக்க வைப்பதை தவிர்க்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.